1970 மார்ச் 21]

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, திருத்தணியிலே பெண்கள் உயர்தரக் கல்விக்காக அங்குள்ள பொதுமக்கள் பணத்தைக் கொடுத்து, நிலத்தை வாங்கி எஜுகேஷன் டிபார்ட் மெண்டிடம் ஒப்படைத்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எஜுகேஷன் டிபார்ட்மென்ட் அதற்கு கட்டிடம் கட்டுவதற்காக ஒரு எஸ்டிமேட் தயாரித்திருந்துங்கூட, பணத்தைச் செலவு செய்து கட்டிடம் கட்டவில்லையென்பது தெரியுமா? என்ன காரணம்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருத்தணியில் 2.68 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் ஊராட்சி ஒன்றியத்தால் வாங்கப்பட்டு, அரசுக்கு அளிக்க முன்வந்திருக்கிறது. அந்த நிலம் வாங்கப்பட்ட விவரங்களைக் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரை ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி அரசு கேட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, கல்வி இயக்குநர் கட்டிடம் கட்டுவதற்கான திட்டத்தை அனுப்பி வைப்பார்கள். அப்படி அனுப்பி வைக்கப்பட்ட பிறகு கட்டிடம் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

Sri Ramakrishna Mission schools in City.

* 475.*Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether a number of schools of the Sri Ramakrishna Mission have been upgraded from this year in Madras City; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : சென்னை நகரத்தில் ராமகிருஷ்ண மிஷன் நிர்வாகத்திலுள்ள ஒரு நடுத்தரப் பள்ளி மட்டும் இவ்வருடம் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் அரிசனங்களுக்காக பஸ் கம்பெனி

* 476 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை மாவட்டத்தில் அரிசன மக்கள், பின் தங்கிய வகுப்பினரின் பங்குத் தொகையுடன் புதிய பஸ் கம்பெனி துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை, மதுரை மாவட்டத்தில் இதற்கு முன்பே அரிசனங்களுக்காக அவர்களாலேயே அவர்களுடைய பங்குத் தொகையைக் கொண்டு பஸ் கம்பெனி ஒன்று துவக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இந்த பஸ் கம்பெனி லாபத்தில் ஓடுகிறதா? லாபத்தில் ஓடினால் இதுபோல மற்ற மாவட்டங்களிலும் அரிசனமக்கள் பின்தங்கிய வகுப்பினரின் பங்குத் தொகையிலே கூட்டுறவு முறையிலே பஸ் கம்பெனி துவங்க அரசு உதவி செய்யுமா?